


# போர் வாள்


- - - திராவிடர் வார வெளியீடு - - -

ஆசிரியர்கள்: காஞ்சி.மணிமொழியார், மா.இளஞ்செழியன் (...)

திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசி 15
சென்னை, 26—2—49

வீச்சு 26


## "வகுப்புத் துவேஷம் ஒழிக!" டி. எம். சுப்பிரமணியன்



அண்மையில் **பாம்புகள் மாநாட்டில்** தலைமைவகித்தபாம்பு பேசியதாவது: ஸ்ரீமான்களே! ஸ்ரீமாட்டி ா! இந்தப் பாழாய்ப்போன மனிதர்கள் பாம்புத்துவேஷம் பிடித்து அலைகிறார்கள்! நம்மைப் பார்க்கும் த்திலெல்லாம அடித்துப் போடுகிறார்கள்! இதென்ன அக்கிரமம்! நாம் மனிதர்களின் உயிரைக் குடிப்ப த்தவிர வேறு ஏதேனும் குற்றம் செய்கிறோமா? இவ்வளவு வகுப்புத் துவேஷமா இவர்களுக்கு? நாம் வளவு நல்லவர்கள்! எவ்வளவு அழகாக இருக்கிறோம்! நம்மீது இவ்வளவு துவேஷப் பிரசாரமா? விகச் சட்டமறுப்புச் செய்தாவது இந்த துவேஷத்தை நாம் ஒழித்தாக வேண்டும்!

[பாம்பு மஹாஜனங்களிடமிருந்து, பலமான வால்தட்டுதல்! அதாவது மனிதமொழியில் கைதட்டுதல்.]

*　　*　　*　　*　　*

"சேலத்தில் சென்ற கிழமை கூடிய பிராமணர்கள் மாநாட்டில், மாநாட்டுத் தலைவர், திராவிடர்கழகம் பிராமணர்கள்மீது துவேஷப் பிரசாரம் செய்து வருகிறது, இந்தப் பிரசாரத்தை எப்படியேனும் ஒழித்தாகவேண்டும் விரமுழக்கம் செய்திருக்கிறார்."

—பத்திரிகைச் செய்தி.

# நேற்று! இன்று! நாளை!

★

## ஒரு தொடர் கதை!

★

### 1

**"கணக்கை எடு"—நேற்று!**

**"பிடியை விடு"—இன்று!**

**"வெளியே ஓடு"—நாளை!**

இவை, சுவைமிக்க ஒரு தொடர்கதையின் மூன்று அத்தியாயங்கள்! முதல் அத்தியாயம் முற்றிலும் எழுதப்பட்டுவிட்டது. இரண்டாவது அத்தியாயம் இப்போதுதான் எழுதப்பட்டு வருகிறது. மூன்றாவதும், கடைசியும், தொடர்கதைக்கே உயிர்நாடி போன்ற நிகழ்ச்சிச் சித்திரங்கள் நிறைந்ததும், ரசமான கட்டங்கள் பல கொண்டதும், கருத்துச் செறிவு மிக்கதும், சிற்சிலருக்கு கசப்பைத் தரக்கூடியதுமாகிய அத்தியாயம், முக்கியமான அத்தியாயம், முடிவான அத்தியாயம் இன்னும் எழுதப்படவில்லை!

முதல் அத்தியாயம் அப்படி ஒன்றும் "நெஞ்சை அள்ளும் ஓர் சிலப்பதிகாரம்" அல்ல! அற்புதமான சம்பவங்களோ அழகான தமிழ் நடையோ வாய்ந்ததுமல்ல! அந்த அத்தியாயம்தான் இந்தத் தொடர்கதையின் மிக முக்கியமான பகுதி என்று சொல்வதற்குமில்லை! அப்படி அது அமையாதது தவறும் அல்ல! அப்படி அது அமைந்திருக்க வேண்டும் என்று எவரேனும் எதிர்பார்த்தால் அது நியாயமும் அல்ல! எந்தத் தொடர்கதையிலுமே முதல் அத்தியாயம் மிகச் சிறப்பான அத்தியாயமாக அமைந்திருக்காது. ஏனெனில் அது ஆரம்ப அத்தியாயம்! தொடர்கதையிலே வரும் கதா பாத்திரங்களை அறிமுகம் செய்து வைப்பது, பின்னால் கதையில் நிகழ இருக்கிற அற்புதமான சம்பவங்கட்கு ஏற்ற சூழ்நிலையை உண்டுபண்ணுவது, கதையின் பல்வேறு பகுதிகட்கு ஆரம்ப விதை தூவுவது ஆகிய பணிகளைத்தான் முதல் அத்தியாயம் நிறைவேற்ற முடியும். ஒரே வார்த்தையில் சொல்வதானால், முதல் அத்தியாயம், கதைக்கு கடைக்கால் போடும் அத்தியாயம். கடைக்கால், கட்டிடத்திற்கு மிக மிக அவசியம்! கடைக்கால் இல்லாவிட்டால் கட்டிடம் இல்லை! அப்படி கடைக்கால் இல்லாமல் கட்டிடம் எழுப்பப்பட்டால் அது நிலைக்காது! கட்டிடம் எவ்வளவுக்கெவ்வளவு உறுதியானதாகவும் நீண்டநாள் நிலைத்திருக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் கடைக்கால் உறுதியானதாகவும் ஆழமானதாகவும் இருக்க வேண்டும், கடைக்காலைப் பொறுத்தவரை யாரும் அழகையோ அலங்காரத்தையோ கவனிக்கமாட்டார்கள் உறுதியையும் உயரத்தையும்தான் கவனிப்பார்கள். அழகு, கட்டிடம் அமைக்கும்போது கவனிக்கப்படவேண்டிய "சூட்சுமம்"! கடைக்கால் போடும்போது பார்க்கப்படவேண்டிய "பொருத்தம்" அல்ல!

முதல் அத்தியாயம் மிக மிக முக்கியமான அத்தியாயம் அல்ல என்றாலும் அதனை முக்யத்துவமே இல்லாத அத்தியாயம் என்று சொல்வதற்கில்லை—கடைக்கால் முக்கியம் அல்ல என்று யார் சொல்ல முடியும்! முதல் அத்தியாயம், அது முதல் அத்தியாயமாயிருக்கிறது என்ற காரணத்தாலேயே ஓரளவு முக்யத்துவம் உடையதாய் விடுகிறது. முதல் அத்தியாயம் சுவையுள்ளதாய் இருந்தால்தான் வாசகர்கள் பிற அத்தியாயங்களைப் படிப்பார்கள். முதல் அத்தியாயத்தின் நடை, போக்கு, அமைப்பு முதலியவைதான் கதையைப்பற்றி நல்லதோ கெட்டதோ ஏதோ ஒருவித அபிப்பிராயத்தை படிப்பவர் உள்ளத்தில் அமைத்துவிடுகிறது. பிரபலமான எழுத்தாளர்கட்குக்கூட அதிகமான "தலைவலி"யைத் தருவது இந்த முதல் அத்தியாயம்தான்! ஒரு கதையையோ கட்டுரையையோ கவிதையையோ நாடகத்தையோ எழுதுவதில் சிக்கலான கட்டம் எப்போது வரும் என்று கேட்டால், அந்தக் கதையையோ கட்டுரையையோ தொடங்கும்போதுதான் என்பதை நல்ல எழுத்தாளர்கள் பெரும்பாலும் ஒப்புக்கொள்வர். எழுத ஆரம்பித்துவிட்டால், பிறகு மலைவீழ் அருவி போல தங்குதடையின்றி ஓடிக்கொண்டேயிருக்கும் தன்மைபடைத்த பேனாவை ஏந்தியிருக்கும் சிறந்த எழுத்தாளர்கள்கூட அந்த "எழுத ஆரம்பிப்பது" என்ற கட்டத்திலே அதிக சிரமப்படுவதும், எழுதிய தாளைக் கிழித்தெறிவதும், கிழித்த தாளை மீண்டும் எடுத்துப் பார்ப்பதும், மறுபடியும் எழுதுவதும், எழுதியதை அடித்துத் திருத்துவதும், திருத்தியதை அடித்துவிட்டு முதலில் எழுதியதையே எழுதுவதும், காரணமின்றி முதலில் எழுதிய வாக்கியத்தை அடித்துவிட்டு அதைவிட அழகுக் குறைச்சலான வேறொரு வாக்கியத்தை எழுதுவதும் ஆகிய இதுபோன்ற சங்கடத்திலே சிக்கிக்கொள்வது சகஜம்! சில சமயங்களிலே எழுத ஆரம்பிக்கும்போது ஏற்படும் இச்சிக்கல் காரணமாக பிறகு எழுதிக் கொள்ளலாம் என்று எழுத்தாளர்கள் எழுந்துபோய்விடுவதும் உண்டு! ஆகவே முதல் அத்தியாயத்தை எழுதுவதி

பொறுப்புமிக்க பணி என்பது மட்டுமல்ல கொஞ்சம் சிரமமான வேலைகூட! இந்தச் சிரமமான வேலையைச் செவ்வையாகச் செய்து முடித்தனர் நீதிக்கட்சியினர் 21 ஆண்டுகட்கு முன்னர்!

நீதிக் கட்சியினரால் எழுதி முடிக்கப்பட்டுவிட்ட இந்த முதல் அத்தியாயத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியும்தான் இரண்டாவது அத்தியாயம்! இந்த அத்தியாயம் இப்போதுதான் எழுதப்பட்டு வருகிறது! இதற்குத்தான் ஒருபுறத்தில் பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவும், மற்றொரு புறத்தில் பொதுமக்களின் பரம்பரைப் பகைவர்களான ஒரு சிறு கூட்டத்தாரின் வரட்டுத் தவளைக் கூச்சல் போன்ற வெற்றாரவார வீண் எதிர்ப்புக் கூச்சலும் இருந்துவருகிறது. இந்த அத்தியாயத்தை, இன்று, இச் சிறு கூட்டத்தாரின் சலசலப்புக்கு சிறிதும் அஞ்சாமல், தைரியமாக, துணிவாக, தெளிவாக, அழகாகவும், அருமையான முறையிலேயும் எழுதி வருபவர் இந்தி நுழைப்பு, ஆணவ ஆட்சிமுறை, பழமைப் பித்து, அதிகார வெறி, கொடுமையான அடக்குமுறை, டில்லி தேவதைகட்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும் அடிமைப் புத்தி ஆகிய காரணங்களால் நம் வெறுப்புக்கும் பகைமைக்கும், தம் தூய நடத்தை, குணசீலம், ஒழுக்கமான வாழ்க்கை, சீரிய தனிப்பட்ட பண்புகள் இவற்றின் காரணமாக நம் அன்புக்கும் ஆதரவுக்கும் ஆளாகியுள்ள முதலமைச்சர் ஓமந்தூரார்தான்! சுயநலம் என்னும் உரைகல்லிலேயே எந்தப் பொதுநலப் பிரச்சினையையும் உரைத்துப் பார்க்கும் உலுத்தத்தனம் நிறைந்த முப்புரியாளர்களின் முணுமுணுப்புக்கும் சலசலப்புக்கும் சிறிதும் விட்டுக்கொடாமல் இந்த அத்தியாயம் தெளிவான முறையிலும் திட்பமான நடையிலும் எழுதி முடிக்கப்பட்டு விடவேண்டும் என்பது நம் ஆசை. பெரிதும் அப்படியே நடக்கும் என்பது நம் நம்பிக்கை.

முதல் அத்தியாயத்தை எழுதுவதற்கு கொஞ்சம் தைரியமும் சிறிதளவு சிந்தனைசக்தியும் இருந்தால் போதும். இரண்டாம் அத்தியாயத்தை வெற்றிகரமாக எழுதிமுடிப்பதற்கு அதாவது முதல் அத்தியாயத்தைத் தொடர்ந்து எழுதுவதற்கு நெஞ்சுத் துணிச்சல் ஒன்றுதான் தேவை; வேறொன்றும் தேவையில்லை. ஆனால் கடைசி அத்தியாயத்தை எழுதுவதோ முதல் இரு அத்தியாயங்களைத் தீட்டுவதுபோல அவ்வளவு எளிதான காரியமல்ல! விரைவில் முடியக்கூடியதுமல்ல! அதனைத் தீட்டுவதற்கு அலாதியான திறமையும், அற்புதமான புத்திகூர்மையும், அசாதாரணமான எழுதுகோலும், ஆபத்துகள் ஆயிரம் ஆயிரம் வந்துற்றபோதும் அத்தனைக்கும் அணுவளவும் அஞ்சாது ஈடுகொடுத்துப் போராடி எடுத்த பணியை வெற்றிபுரிக்குக் கொண்டுசேர்க்கும் மகத்தான மனஉறுதியும் இருந்தாக வேண்டும், புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல, சுரண்டல் கூட்டத்தாரின் சூழ்ச்சித் திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எந்தெந்தத் திசையிலிருந்தெல்லாமோ புறப்பட்டவண்ணம் இருக்கும். அந்தத் திட்டங்கள் அத்தனையையும் வெடிவைத்துத் தகர்த்தெறியும் வைர உள்ளமும் தைரியப் போக்கும் கொண்டிருக்க வேண்டும். தூற்றல் அந்தாதியும் வசைமாரி வெண்பாவும் சிற்சிலரிடமிருந்து கிளம்பிய வண்ணம் இருக்கும். அவை கண்டு கசங்காத கருத்து உரம் இருக்க வேண்டும். நாஸ்திகா என்பர்! நயவஞ்சகா என்பர்! பிராமணத்துவேஷி என்பர்! சாஸ்திர விரோதி என்பர்! ஒழுக்கக்கேடன் என்பர்! ஆச்சாரம் அற்றவன் என்பர்! பொய்யன் புலையன் புரட்டன் துஷ்டன் துன்மார்க்கன் தூர்த்தன் என்றெல்லாம் கூறுவர். துவேஷ விஷத்தை நம்மீது பொழிந்தவண்ணம் இருப்பர். “இவற்றால் எல்லாம் எம் கொள்கை கோட்பாடுகளை இலட்சியத் திட்டங்களை தீர்மானங்களை அழிக்க முடியாது. இதனை நீவிர் அறிவீராக” என்று புன்முறுவல் பூத்தவண்ணம் பொன்மொழி புகன்றுவிட்டு புரட்சிப் பணியை ஆற்றும் அஞ்சாமைப் பண்பிலே மிதக்கும் நெஞ்சம் அமைந்தவராதல் வேண்டும். இவ்வளவு தகுதிகளும் திறமைகளும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களால் மட்டுமே நாம் குறிப்பிடும் தொடர்கதையின் கடைசி அத்தியாயத்தை எழுதமுடியும்! முதல் அத்தியாயத்தை எளிதில் எழுதிவிட்ட நீதிக் கட்சியினர் இன்றிருந்தால் அவர்களாலும் இதை எழுதமுடியாது. இரண்டாம் அத்தியாயத்தை இப்போது எழுதிக்கொண்டிருக்கிறாரே ஓமந்தூரார் அவராலும் இதை எழுதமுடியாது. இந்தக் கடைசி அத்தியாயத்தை எழுதும்தகுதியும் திறமையும் வாய்ந்த இயக்கம் தென்னாட்டில், ஏன், இந்தியாவிலேயே, திராவிடர் கழகம் ஒன்றுதான் இருக்கிறது! அந்தக் கழகம் ஒன்றினால்தான் இந்தக் காரியம் வெற்றிகரமாகச் செய்யப்பட முடியும். கழகம் நிச்சயம் இதனைச் செய்து முடிக்கும்—செய்யத்தான் போகிறது! நாம் குறிப்பிடும் சுவையான தொடர்கதையின் இறுதி அத்தியாயத்தை எழுத இருப்பது திராவிடர் கழகம்தான்! இதிற் சிறிதும் ஐயமில்லை!

## 2

தமிழகத்தில் பார்க்கும் திசையில் எல்லாம் பெரும் பெரும் கோயில்கள் விண்ணை இடிக்கும் கோபுரங்களுடன் காட்சி தருகின்றனவே, அவை, ஆண்டவனை மக்கள் தரிசிப்பதற்காக அமைந்துள்ள ஆலயங்களாகமட்டும் அமைந்திருக்கவில்லை, இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகளைத் தம்மகத்தே குவித்து வைத்துக்கொண்டுள்ள பொக்கிஷக் கோட்டைகளாக இருக்கின்றன. தங்கத்தால் கூரை வேய்ந்த கோயில்கள், வெள்ளித் தேர் படைத்த கோயில்கள், வைரத்தால் செய்யப்பட்ட முடியுடை ஆண்டவன் எழுந்தருளியுள்ள கோயில்கள், வைர மூக்குத்தி அணிந்துள்ள அம்மன் ஆலயங்கள் என்று இப்படித்தான் ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு பணக் கோட்டையாக இருக்கிறது. திருப்பதி வெங்கடாசலாதிபதி, தில்லை நடராசர், மதுரை மீனாட்சியம்மன், காஞ்சி வெங்கடேசபெருமாள், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் போன்ற ஆலயங்களின் பணப்பெட்டி பெரிய பெரிய சமஸ்தானங்களின் பணப்பெட்டியைவிட பலமடங்கு பெரியதாக இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. நகைகள், வாகனங்கள், கோயில் சொத்துகள், கோயிலுக்குச் சொந்தமான மனைகள், வீடுகள், மாடமாளிகைகள், வயல்கள், அவற்றின் விளைவுகள், தோட்டம் துறவுகள், ரொக்கப் பணம்,

(10-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுடையோரும் கூறத் துணியமுடியாதே? முடியாதெனில் ஏன் இன்னமும் இந்த வெட்டிச் செலவு? கட்டத் துணியின்றித் தவிக்கும் கந்தன், தலைக்கு எண்ணெயின்றி சடைமயிர் கொண்டிருக்கும் சாத்தன், மாடாக உழைத்தாலும் எலும்புக் கூடாகவே இருக்கும் எல்லப்பன், பசியின் கொடுமை தாளாது பாதி வெயிலிலும் சுருண்டுவிழும் பாலன், எலும்புருக்கியால் சிதையும் சின்னப்பன், காசநோயால் வாழ்வையே கசந்து கூறும் குப்பன், மகனைப் படிக்க வைக்கப் பணமில்லையே என்று கூறும் முனியன், படித்தும்வேலையில்லையே என்று பரிதவிக்கும் பச்சை, வேலையிருந்தும் வயிரார உண்ணும் அளவு கூலி இல்லையே என்று கூவும் குமரன்—ஏன் ஆயிரமாயிரம் கோயில்களிலே முடங்கிக் கிடக்கும் சொத்தைக் கொண்டு செத்த வாழ்வு வாழும் இவர்கட்கெல்லாம் சுவைமிகு வாழ்வை அளிக்கக்கூடாது? ஏன் வெள்ளித் தேரையும் தங்கத் தேரையும் உருக்கி எடுத்துப் பணமாக்கிப் பள்ளிக்கூடமாக்கி பாரோர்க்கெல்லாம் படிப்பை அளித்து அறியாமை இருளை அகற்றக் கூடாது? ஏன் கோபுரவாசலையும் இந்திர விமானத்தையும் ஆயிரங்கால் மண்டபத்தையும் உள், வெளி பிரகாரங்களையும் இடித்துத் தகர்த்து வீடின்றித் தவிப்போர் வாழ அங்கே பெரிய பெரிய மாளிகைகள் எழுப்பக்கூடாது? ஏன் கோயில் பட்டாவாகக் கிடக்கும் ஆயிரமாயிரம் வேலி நிலங்களை பாட்டாளிகட்கெல்லாம் பங்கிட்டுத் தந்து வறுமையை, அவர்கள் படும் வேதனையை, இரண்டின் விளைவாக எழும் சாக்காட்டை, அதன் முன் தோன்றும் பற்பல நோய்களைத் தடுக்கக்கூடாது? ஏன் கோயில் சொத்துக்களை பெரிய பெரிய தொழிற்சாலைகள் அமைக்கவும், பூந்தோட்டங்கள் நிறுவவும், மருத்துவச் சாலைகள் தொடங்கவும், அனாதைவிடுதிகள் அமைக்கவும், ஏழைப் பிள்ளைகட்கு உணவு அளிக்கவும், பிச்சைக்காரரைப் போக்கவும் பிறர் பிச்சைக்காரர் ஆவதைத் தடுக்கவும் பயன்படுத்தக்கூடாது? "நடமாடும் கோயில் நம்பற்கு ஒன்று ஈயில் படமாடும் கோயில் பரமற்கு அஃது ஆமே!" என்றாரே திருமூலர், அது மெய்யல்லவா? ஆம் எனில் ஏன் அவ்வண்ணம் நடக்கக்கூடாது? திருமூலர் கூறியதுபோல நடமாடும் தெய்வங்களான மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதுதானே படமாடும் தெய்வங்களான ஆண்டவருக்கு நல்வாழ்வு அளித்தது போல்வது? பிறகு ஏன் தயக்கம்? வாருங்கள், ஆண்டவன் ஆலயங்களை மக்கள் மன்றங்களாக்குவோம், புதுவாழ்வு நிலையங்களாக்குவோம், இளைஞர் பூங்காக்கள் ஆக்குவோம், வாலிபர் விளையாட்டு மைதானங்களாக்குவோம், மக்கள் தேவையை நிறைவு செய்யும் நல்ல நல்ல தொழில் நிலையங்களாக்குவோம், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களாக்குவோம், கல்லூரி மண்டபங்களாக கல்விக் கூடங்களாக பல்கலைக் கழகங்களாக ஆக்குவோம், மருத்துவ நிலையங்களாக்குவோம், சட்டமன்றங்கள் ஆக்குவோம், இவையெலாம் செய்து, இன்பம், மக்கட் சமுதாயத்தில் தழைக்கவழி தேடுவோம்! வாருங்கள்! எல்லோரும் வாருங்கள்!

சுயமரியாதைக்காரர்கள் மட்டும் தான் தைரியமாக இதுபோலக் கூறுகின்றனர், இன்று! இன்றுமட்டுமா சுயமரியாதை இயக்கம் தோன்றிய அந்தக் காலத்திலிருந்தே இந்த அரிய கொள்கைகளை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறிவருகின்றனர்! ஆனால் இன்னமும் பலருக்கு—வேற்றுக்கட்சியிலே இருப்பவர்கள், வேறு முகாம்களிலே உலவுபவர்கள், திருநீறுதாரிகள் திருமண் பூசுவோர்கள், முப்புரி அணிந்தவர்கள் மூதாதையர் மொழி, வழி, என்று பேசுபவர்கள்—ஆகிய பலருக்கு, இந்த மக்கள் மறுமலர்ச்சித் திட்டம் நாஸ்திகமாகத் தென்படுகிறது, இதுபோலப் பேசுவதே ரௌரவாதி நரகத்தை நமக்குத் தேடித்தரும் என்று நம்புகிறார்கள், மக்கள் நல்வாழ்வுக்கு வழி வகுப்பதே உண்மையான ஆஸ்திகம் என்பதை உணர மறுக்கிறார்கள், மக்கள் பசியால் துடிக்கத் துடிக்க கல் பித்தளை செப்பு இவற்றாலான சிலைகள் மீது பாலையும் தெளிதேனையும் கட்டித் தயிரையும் பழச்சாறையும் ஊற்றுவதுதான் உண்மையான நாஸ்திகம் என்பதை அறிய மறுக்கிறார்கள், என்றாலும், நாம், தன்மான இயக்கத்தவர்கள், இந்த பகுத்தறிவுப் பணி புரியத் தயங்குவதில்லை, கோயில் சொத்தினை மக்களுக்காக்கு என்று கூற அஞ்சுவதில்லை, நாம் கூறுவதுதான் நியாயம் என்பதை நாம் மிக நன்றாக அறிந்திருக்கிறோம், ஆகையால்தான் நமக்கு அச்சம் அணுவளவும் ஏற்படுவதில்லை.

கோயில்களையும், கோயில்களைப் போலவே உள்ள குட்டிக் கோயில்களாகிய மடங்களையும், பொதுவுடைமையாக்க வேண்டும், அவற்றின் சொத்துகளை மக்கள் நலனுக்காக்கவேண்டும் என்பதுதான் கோயில், மடங்களைப்பற்றிய நமது முடிவான கருத்து.

மக்கள், மதத்தின் காரணமாகவும் மத மதோன்மத்தர்கள் கட்டிவைத்துள்ள புராணப் பொய்யுரைகளின் காரணமாகவும், அந்த ஏடுகளைப் படைத்த எத்தர்களின் பஞ்ச தந்திர சூழ்ச்சிகளின் காரணமாகவும் கோயில், மட, சொத்துகளைப் பொதுவுடைமை ஆக்குவது என்னும் நமது புரட்சித் திட்டத்துக்கு உடனே ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். எனவேதான் இத்திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

இந்த மக்கள் மறு மலர்ச்சித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதிலே மூன்று தனித்தனி கட்டங்கள் உள்ளன.

முதல் கட்டம், **கணக்கை எடு** என்று கூறும் கட்டம்! இரண்டாவது, **பிடியை விடு** என்று புகலும் கட்டம்! மூன்றாவது, முக்கியமானது, **வெளியே ஓடு** என்று உரைக்கும் கட்டம்!

## 3

கோயில்களையும் மடங்களையும் மக்களின் பொதுச் சொத்தாக ஆக்கவேண்டுமானால் அதற்கு நாம் முதலில் செய்யவேண்டிய வேலை, கோயில்களையும் மடங்களையும் தங்கள் பாட்டனார் அல்லது தகப்பனார் சொத்து என்று "தவறாக" எண்ணிக்கொண்டு, அவற்றின் சொத்துகளைச் சுரண்டிப் பிழைக்கும் சுயநல சொரூபிகளைப் பார்த்து, "எடு கணக்கை! கொடு செலவுத் திட்டத்தை! காட்டு மிச்சத் தொகையை! ஓட்டு உன்னிடமிருந்து, உன் அக்கிரமத்தை!" என்று ஆணையிடுவது! "தம்மைத் தட்டிக் கேட்க யார் இருக்கி

னர்கள், தாம் எது செய்தால் என்ன, எவ்வளவு பணத்தை எப்படிப் பாழாக்கினால்தான் என்ன, எத்தகைய போக போக்கியங்களுக்கும் தீநெறி வாழ்க்கைக்கும் கோயில் சொத்தைச் சூறையாடினால்தான் என்ன, நம் ஆசை நாயகிகட்கோ நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அலங்காரவல்லிகட்கோ ஆண்டவன் சொத்தை அர்ப்பணித்தால்தான் என்ன?" என்று இறுமாந்து கிடந்த கோயில் பூனைகளையும் மடத்துப் பெருச்சாளிகளையும் "நிறுத்துங்கள் உங்கள் அட்டகாசத்தை! காட்டுங்கள் செலவுக் கணக்கை! இல்லையேல் வாருங்கள் வழக்கு மன்றத்திற்கு! கிடந்து சாவுங்கள் சிறைச்சாலையில்!" என்று கூறவேண்டும் சர்க்கார். அப்படிக் கூறுவதுதான் மட, ஆலய, சீர்திருத்தத்தின் முதல் கட்டம்! இந்த நற்பணியைத்தான், நீதிக் கட்சி அமைச்சுக் குழுவினர், நாடாண்ட காலத்தில், நெஞ்சுத்துணிவுடன் செய்து காட்டினர், இன்றுபோலத்தான் அன்றும், அக்கிரகாரம், ஆஹா ஊஹூ என்று புலிவேஷம் காட்டிற்று! கனபாடிகளும் சாஸ்திரிகளும், "மதத்திலே நீங்கள் கைவைக்கலாச்சா புனித சாஸ்திரத்தை புல்லர் நீங்கள் சிதைக்கலாச்சா!" என்று கர்த்தபக்குரல் எழுப்பத் தவறவில்லை—அன்றும்! இந்நாள் போலவேதான் அந்நாளிலும் "குளத்தங்கரைகள்" கொக்கரித்தன! "குறுக்கு நூல்கள்" சினந்து சீறின! "சட்ட நிபுணர்கள்" சல்லடம் கட்டினர், சங்கராச்சாரிகள் "விட்டேனா பார்!" என்றனர்! என்றாலும் என்ன? சிறுநரிகள் சலசலப்புக் காட்டுவதற்காக சிங்க ஏறுகள் சும்மாவா இருந்துவிடும்? நீதிக் கட்சியினர் கொண்டு வந்த அறநிலைய மசோதா நிறைவேறியது! மசோதா மூலம் அறநிலையக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, கோயில்களின் வரவு செலவுகளைச் சரி பார்க்கும் அதிகாரம் அவர்கட்கு அளிக்கப்பட்டு, ஒழுங்கீனங்கள் நடைபெறுமிடத்தில் கோயில் தலைவர்களை கூண்டில் நிறுத்தவும் அவர்கட்கு உரிமை தரப்பட்டது. நீதிக் கட்சியினரின் மசோதா கோயில்களை மட்டும் தான் கட்டுப்படுத்திற்று—மடங்கள் அதில் இணைக்கப்படவில்லை.

## 4

"**கணக்கை எடு!**" என்றது நீதிக் கட்சியினர் கொணர்ந்த அறநிலையச் சட்டம்! கணக்கை எடுத்தனர் கோயிற் பெருச்சாளிகள்! அறநிலைப் பாதுகாப்புக் குழுவினர் அவர்கள் தந்த கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தனர்—உள்ளே பாம்பும் தேளும் நடமாடக் கண்டனர்! சூதும் சூழ்ச்சியும் ஏராளமாக இருந்தது கணக்கில்! கோயில்களின் உள்ளிருந்தே வளைதோண்டி உண்டு கொழுத்துவந்த அப்பெருச்சாளிகள் வழக்குமன்றத்திற்கு இழுக்கப்பட்டனர். ஆனால் சட்டம்..இந்நாட்டில் சாமானியமானதாகவா இருக்கிறது! சிறிய கோர்ட்டிலிருந்து பெரிய கோர்ட்டுவரை அது நீண்ட பயணம் செய்து நெடுங்காலத்திற்குப்பின் ஏதோ ஒரு தீர்ப்பை அது அளிப்பதற்குள், சுரண்டிக் கொழுத்த எத்தர்கள் மிச்சம் உள்ளதையும் மென்று தீர்த்துவிடுகின்றனர், பிறகு—எச்சில் இலைதான் மிச்சம்! அறநிலைக் குழுவினர், சட்டம் மேற்கொள்ளும் நீண்ட பயணத்தின் காரணமாக தங்கள் முயற்சிகள் யாவும் வீணாகக் கண்டனர், உள்ளம் உடைந்தனர், இதுபோல சட்டம் என்ற இருட்டறையில் தாம் நீதி என்ற வெளிச்சத்தைத் தேடி அலையும் நேரத்தில் கோயில் கள்ளர்கள் அகப்பட்டது அவ்வளவையும் சுருட்டிக்கொள்ளும் சூதுமார்க்கத்தைத் தாம் கண்டறிந்தும் அதனைத் திருத்த தமக்கு ஆற்றல் இல்லையே, என் செய்வது என்று வருந்தினர் எனவே அயர்ந்து கிடந்தனர்! அரும்பணி புரிந்திலர்!

ஓமந்தூரார் இந்நிலையில் இருக்கின்றது கோயில் பாதுகாப்புச் சட்டம் என்பதைக் கண்டார்! இதற்கு ஏதேனும் ஒரு மாற்றுவழி காணாவிட்டால் கோயில் சொத்துக்கள் முழுவதும் இன்னும் சில நாளில் சூறையாடப்பட்டுவிடும் என்பதை அறிந்தார்! எனவே புது மசோதா ஒன்றைக் கொணர்ந்தார்! அம் மசோதாவின் மூலம் கோயில் பெருச்சாளிகளின் வாலாட்டத்தை ஒட்ட நறுக்க முனைந்தார்! இச் சுரண்டல் ஒழிப்புத் திட்டத்தில் மடங்கள் என்பவற்றையும் எளிதில் இணைத்தார்! எனவே நம் வாழ்த்தை எல்லாம் பெற்றது—வெல்க அவர் முயற்சி!

எடு கணக்கை என்றது நீதிக்கட்சி! கோயில் பூனைகள் எடுத்த கணக்கோ சுரண்டல்காரர்களின் சூது முழுவதையும் கண்ணாடியெனக் காட்டிவிட்டது, அச்சூது போகவேண்டுமானால் அச் சூதர் தம் பிடியிலிருந்து கோயில்கள் விடுபட வேண்டும், கோயில்களும் மடங்களும் சர்க்காரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வந்தாக வேண்டும், சர்க்காரால் நியமிக்கப்படும் அலுவலர்களின் நேர் ஆட்சியின்கீழ் அவை அமையவேண்டும், அபிஷேகமா அர்ச்சனையா தனிக் கட்டளையா ஆறுகால பூஜையா கோயில் புனரமைப்பா எதுவானாலும் சரி அவர்கள் அனுமதிக்கும் செலவுத் தொகைக்குள் நடந்தாக வேண்டும், இந்நிலை ஏற்பட்டால்தான் கோயிலும் மடமும் சீர்படும். சுருக்கமாகச் சொல்வதானால் மடங்களையும் கோயில்களையும் ஆட்சி செய்யும் ஆணழகர்களைப் பார்த்து, "**விடுங்கள் பிடியை!** விடுங்கள் உம் ஆட்சியை! விடுங்கள் உம் கொடுமையை! விடுங்கள் உம் தீய ஒழுக்கத்தை! விடுங்கள் தண்டச் செலவை! விடுங்கள் உம் காமக் களியாட்டத்தை! விடுங்கள் பொக்கிஷத்தை! விடுங்கள் உம் சுயநல சுரண்டல் தத்துவத்தை" என்று துணிவோடு கூறவேண்டும்! கூறினால்தான் அக் குறைமதியாளர்களின் கொட்டம் அடங்கும்! கூறுகிறார் ஓமந்தூரார்! கூறுகிறது, இப்போது அவர் கொண்டு வந்துள்ள அறநிலை மசோதா! எனவே நம் பாராட்டு அவருக்கு!

"**விடு பிடியை!**"—ஓமந்தூராரின் மசோதா இதைத்தான் கூறுகிறது. ஐயமில்லை, இது மிக மிக உறுதி வாய்ந்த கட்டளை! கட்டளைத் தம்பிரான்களையும் கோயில் கொற்றவர்களையும் கதிகலங்கச் செய்கிறது இக்கட்டளை என்பது கண்கூடு!

நல்ல கட்டளை, நாட்டுக்குத் தேவையான கட்டளை, நச்சு நினைப்புக் கொண்டவர்களின் நாசக் கருத்தை நறுக்கும் கட்டளை, நம் உள்ளத்தைக் குளிரச் செய்யும் நியாயமான கட்டளை இது! ஆனால் இந்தக் கட்டளை, மட்டும் போதாது! மடங்களும் கோயில்களும்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

26—2—49 சனிக்கிழமை

# சர்தார் சர்க்கஸ்!

"ஹலோ மகாஜனங்களே! கோடி நமஸ்காரம்! இங்கே பாருங்கள்! இதோ உருட்டிய கண்களுடன் உறுமிக்கொண்டே வருகிறதே இது சிறுத்தை! இதன் இயல்பு சீறிப்பாய்வது. அதோ தன் கூரிய நகங்களைக் கிறியவண்ணம் பதுங்கிக் கொண்டிருக்கிறதே அது புலி! பதுங்கிக்கொண்டிருக்கிறது ஆகவே பயந்து கொண்டிருக்கிறது என்று எண்ணிவிடாதீர்கள்! புலி பதுங்குவது பாய்வதற்கு! பாய்ந்து பிறாண்டினால் ஒரே விநாடியில் ஆளைக்கொன்றுவிடும்! ஆபத்தே உருவான மிருகம் அது! அதனிடம் சர்வ ஜாக்கிரதையாக இருந்தாக வேண்டும் இல்லையேல் சாவுக் கிடங்கு ஆக்கிவிடும் இந்த சர்க்கஸ் கொட்டகையை! அடுத்தாற்போல் இருப்பது சிங்கம்! அதன் கண்கள் கக்கும் கனல் எவ்வளவு அனல் வீசுகிறது பாருங்கள்! அந்த அனலில் நம் நிழல் சிக்கினாலும் நாமெல்லாம் புனல் ஆகிவிட வேண்டியதுதான்! ஆகவேதான் அதை இரும்புக் கூண்டிலே பலமான கம்பிகளுக்கிடையே அடைத்துவைத்திருக்கிறோம்! இப்போது நான் இங்கே கூட்டிவந்து வேடிக்கை காட்டப் போவது ஒரு காட்டு யானை! அது போட்டால் கூச்சல் நீங்கள் வீட்டுக்கு ஓடிவிடுவீர்கள் அவ்வளவு சேட்டை செய்யும் மிக வாட்ட சாட்டமான வம்புப் பிராணி அது—கோயில் யானை போல் சாதுவான பிராணி அல்ல! அப்புறம் நான் அழைப்பது ஒட்டைச் சிவிங்கி, அதன் கழுத்து பாம்புபோல் நீண்டிருக்கும், ஆனால் பார்த்தால் அழகாக இருக்கும், அது சாது! அது வரும்போதே கரடி வரும், கரடி நன்றாகத்தான் கூத்தாடும் ஆனால் ஏமாந்தால் நம்மையே கொத்திவிடும். காண்டாமிருகம், முள்ளம்பன்றி, ஒட்டகச் சண்டை, ஆட்டையும் புலியையும் ஒன்றாக நிற்க வைப்பது, ஒவ்வொரு கட்டத்திலும் ஆபத்து அதிகம்; ஆனால் சர்க்கஸ் அற்புதமாக இருக்கும். இன்னும் ஐந்தே நிமிஷத்தில் சர்க்கஸ் ஆரம்பிக்கப்பட்டுவிடும்—உங்கள் மேலான ஒத்துழைப்பு அவசியம் தேவை."

விதவிதமான மிருகங்களை வேடிக்கை காட்டிப் பிழைக்கும் சர்க்கஸ்காரன் இதுபோல, தான் காட்டப் போகும் மிருகங்களுடன் விளையாடுவது எவ்வளவு ஆபத்தானது என்பதை அடுக்கடுக்கான மொழிகளிலே விதம் விதமாக எடுத்துக் கூறுவான், ஏனெனில் அப்படியெல்லாம் சொன்னால்தான் அவன் காட்டஇருக்கும் சர்க்கஸ் அற்புதமானது என்ற எண்ணம் வேடிக்கை பார்க்க வந்துள்ளவர் உள்ளத்தில் வேரூன்றும்! இது, சர்க்கஸ் காட்டிப் பிழைக்கும் சாகசக்காரர்களிடத்திலே சகஜமாகக் காணப்படும் ஓர் சாதாரணப் பழக்கம்!

சர்தார் படேலின் சென்னைச் சொற்பொழிவுகளை நாளிதழ்களில் பார்த்ததும் நமக்கு சர்க்கஸ்காரர்களின் இந்த சாகசம்தான் நினைவுக்கு வந்தது; சர்தார் படேல் பேச்சுக்கும் சர்க்கஸ் நடத்தும் ரிங் மாஸ்டர் கூற்றுக்கும் நடுவே உள்ள அற்புதமான ஒற்றுமை நம்மைத் திகைக்க வைத்துவிட்டது!

சர்தார் படேல், இந்தக் கிழமை, ஹைதராபாத்துக்கு ஏதோ அலுவல் காரணமாகப்போகிறார், அப்படிப் போகிறவர், போகிற வழியிலே சென்னை இருக்கிறது என்ற காரணத்தால் சென்னையிலே இறங்கி இரண்டு நாட்கள் தங்கினார், தங்கினால் சும்மாவா இருக்கிறார்கள் அவர் புன்னகையிலே ஒரு பூலோக சுவர்க்கம் இருக்கிறது என்று கருதுபவர்கள், பூமாலைகளைப் போட்டு பொதுக்கூட்டம் ஒன்று நடத்தினார்கள்; அதற்கு முன்னாடியே, சர்தார் படேல் "சிறு தயவு" காட்டினாலும் தமது சுரண்டல் திட்டங்கள் சம்பூர்ணமாகும் என்றெண்ணும் கொள்ளை லாபக்காரர்களும் கொழுத்த வட்டி கேட்பவர்களும் கனத்த சரீரம் படைத்தவர்களும் கள்ள மார்க்கட் சுறுமீன்களும் இவர்கள் போன்றோர் இன்னும் சிலர் பலரும் அவருக்கு விருந்து வைத்து, வாழ்த்துத்தாள் படித்தார்கள்; அதோடு, வட நாட்டுக் கலாசாரத்திற்கு வெண்சாமரம் வீசுவதற்கென்றே வேதமோதிகள் சிலர் சென்னையில் வெட்கமின்றி நடத்துகிறார்களே ஓர் ஹிந்தி பிரசார சபா, அவர்கள், இச்சமயம் தப்பினால் மறு சமயம் வாய்ப்பதரிது, வந்தார் படேல், இருக்கிறார் இங்கே, போடு ஒரு கூட்டம், சாடு அந்த கருஞ்சட்டைகளை என்று வெண்பா பாடினார்கள், அங்கொரு கூட்டம் திரண்டது, காங்கிரஸ் எம். எல். ஏக்கள்தான் இருக்கவே இருக்கிறார்கள் படேல் தும்மினாலும் அந்தத் தும்மலிலேயே ஒரு மகத்துவம் இருக்கிறது என்று "தத்துவார்த்தம்" கூற, ஆக இவ் வண்ணம் ஒரு நான்கைந்து கூட்டங்கள் நடைபெற்றன, ஒவ்வொன்றிலும் சர்தார் மணிக்கணக்கில் "சிங்க முழக்கம்" புரிந்திருக்கிறார், "வேதிய குலத்தவரோ அல்லது வடஇந்திய நிலத்தவரோ "வள்வள்" என்றாலும் போதும், ஏற்றிவிடு அச்சில் பக்கம் பக்கமாக அப் பேச்சை! திராவிட மாநாடா இருவரியும் போடாதே" என்று கட்டளை பிறப்பிக்கும் மட்டரக ஆசிரியர்கள் உண்டல்லவா பெரிய மனிதர்கள் என்று பெயர் படைத்தவர்கள், அவர்கள் நடத்தும் ஏடுகள் பத்தி பத்தியாகப் பிரசுரித்துவிட்டன பட்டேல் துரை பேசியதை! பத்திரிகைகளில் வந்துள்ளவற்றைப் படித்து முடிப்பதற்கே இரண்டு நாட்களாகும், அவ்வளவு அதிகம் அவர் பேசியிருப்பது! அவர் பேசியிருப்பது அதிகமே தவிர, அந்தப் பேச்சிலே சத்து ஏதும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை, சக்கைதான் ஏராளமாக இருக்கிறது—ஏறத்தாழ சர்க்கஸ்காரனின் பேச்சுப் போல இருக்கிறது சர்தாரின் சொற்பொழிவு!

சர்க்கஸ்காரன் கூண்டிலே உள்ள மிருகங்கள் ஒவ்வொன்றையும் வரிசையாக காட்டிக்கொண்டே

போகிறான், இது இவ்வளவு பயங்கரமானது, இது இவ்வளவு ஆபத்தானது, இது பாய்ந்தாலே போதும் மனிதன் பஸ்மீகரமாக வேண்டியதுதான். இதனிடத்தில் 'விஷமம் அதிகம், இதனிடத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று இதுபோல ஒவ்வொரு மிருகமாக வேடிக்கை பார்ப்பவர்கட்கு, அவன், மிருகங்களை அறிமுகம் செய்கிறான், அதன் மூலம் தன் ஆற்றலை எதிரே இருப்போருக்கு அறிவுறுத்துவதாக அவன் நினைத்துக் கொள்கிறான்! சர்தார் வல்லபாயும் சர்க்கஸ்காரனைப் போலத்தான் நாட்டிலே காணப்படும் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் எடுத்தெடுத்துக்காட்டி, "இவர்கள் ரயில்வே ஸ்ட்ரைக் செய்கிறேன் என்கிறார்கள் இதனால் உணவுப் பஞ்சம்தான் அதிகமாகும், இவர்கள் நேற்று வரை காங்கிரசிலிருந்தவர்கள் இப்போது சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டு தொழிலாளரிடம் கலகத்தை மூட்டிவிடுகிறார்கள் இதனால் துவேஷம்தான் அதிகமாகும், இவர்கள் கம்யூனிஸ்டுகள்—இவர்களால் நாட்டுக்கு அபாயம் அதிகம், இவர்கள் முதலாளிகள்—உற்பத்தி செய்ய மறுக்கிறார்கள்—கேட்டால் வரிப்பளு அதிகம் என்கிறார்கள், இவர்கள் பாட்டாளிகள்—வேலை செய்ய மறுக்கிறார்கள்—அதட்டினால் 'ஸ்ட்ரைக்' என்று பேசுகிறார்கள், இவர்கள் ஆந்திரர்கள் ஆந்திர மாகாணம் எங்கே? இன்னமுமா தாமதம் என்கிறார்கள்! இவர்கள் சீக்கியர்கள்! அவுரங்கசீப் சக்கரவர்த்தியையே ஆட்டிப் படைத்த எங்கட்கு நீ எம்மாத்திரம் என்று கத்தியை உருவுகிறார்கள், இது காஷ்மீர்! இங்கே இலட்சக்கணக்கில் பணம் செலவாகிறது; என்றாலும் பலன் பூஜ்யம்! இவர்கள் மாஜி தியாகிகள் எங்கே எம் தியாகத்துக்குப் பலன் என்று வியாஜ்யம் போடுகிறார்கள்......" என்று இந்த விதத்திலே பேசியிருக்கிறார் பட்டேல், நாட்டு மக்கள் முன்னாலே நின்று நர்த்தனமாடும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் சர்க்கஸ்காரனைப்போல அடுக்கடுக்காக சொல்லிக்காட்டி அவற்றின் ஆபத்துகளையும் எடுத்துக் காட்டுகிறார்! "இவ்வளவு ஆபத்துகள் இருக்கும்போது சர்க்காரை எதிர்க்கிறார்களே சமய சந்தர்ப்பம் தெரியாத பலர், இது நியாயமா?' என்றும் கேட்கிறார்! "ஆகையால் மகாஜனங்களே, நீங்கள் எல்லோரும் எங்களுடன் ஒத்துழைத்தே ஆகவேண்டும்" என்று பதிகமும் பாடுகிறார் ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும்!

எல்லாம் சரி! ஆனால் நாட்டிலே இவ்வளவு ஆபத்துகள் மூளும் விதத்திலே ஏன் ஆட்சிமுறை அமைந்திருக்கிறது? ஏன் சுயராஜ்யம் வந்த பிறகும், சொந்த சர்க்கார் பீடம் ஏறிய பிறகும், "நம்ம தலைவர்கள்" ஆளவந்தார்களாக ஆன பிறகும், படேலும் நேருவும் ஆச்சாரியாரும் ஆசாதும் மந்திரிகளாக ஆனபிறகும் பஞ்சமும் பசியும் பட்டினியும் நாட்டில் உள்ளன? ஏன் வேலைநிறுத்தப் புயல் அடிக்கடி வீசிய வண்ணம் உள்ளது? ஏன் சீக்கியர்கள் சீறவும், உழைப்பவர்கள் உறுமவும், பொதுமக்கள் பொருமவும் ஆன நிலை நேரிட்டிருக்கிறது? ஏன் சர்க்கார் இதுவரை நிலைமையை நேர்படுத்தவில்லை? முயற்சி செய்யவில்லையா? முயன்றும் முடியவில்லையா? என்ன காரணம்? முதலாளிகளும் குற்றம் செய்கிறார்கள், தொழிலாளிகளும் குற்றம் செய்கிறார்கள், கம்யூனிஸ்டுகளும் குற்றம் செய்கிறார்கள், சோஷலிஸ்டுகளும் குற்றம் செய்கிறார்கள், காங்கிரஸ்காரரும் குற்றம் செய்கிறார்கள், மாற்றுக்கட்சியினரும் குற்றம் செய்கிறார்கள், சீக்கியர்களும் குற்றம் செய்கிறார்கள், செந்தமிழரும் குற்றம் செய்கிறார்கள், ஆந்திரரும் குற்றம் செய்கிறார்கள் அனைவருமே குற்றம் செய்கிறார்கள் என்று குற்றப் பத்திரிகையை எல்லார்மீதும் வாசித்துவிட்டால் என்ன அர்த்தம்? யார் உண்மையான குற்றவாளிகள், யார் குற்றவாளிகள் அல்ல? குற்றவாளிகள் இருப்பது உண்மையானால் குற்றவாளிகள் இருக்கும் விதத்திலே ஏன் சர்தார் நடத்தும் சர்க்கார் நடந்துகொள்கிறது? இவற்றையெல்லாம்தான் சர்தார் விளக்கியிருக்கவேண்டும். ஆனால் இதைச் செய்யவில்லை சர்தார். இருக்கும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் முன்வைத்து ஒரு 'சர்க்கஸ்' காட்சி நடத்திவிட்டுப் போய்விட்டார்! இதுதான் சர்தாரைப் போன்ற "சுத்த வீரர்"கட்கு அழகா? நாம் கேட்கிறோம், சர்தாரைப் பார்த்தல்ல, சர்தார் வந்ததும் "வந்தார் வீரர்! வந்தார் வந்தார்" என்று ஆநந்தக் கூத்தாடி அழகழகான படங்களைப் போட்டு, சர்தாரின் புன்னகை என்றும், படேல்ஜியின் சம்மட்டி அடி என்றும் பூகோளப் படத்தையே மாற்றியமைத்த பூஜ்யர் என்றும் மன்னர்களின் மணிமுடி மீதிருந்த மாசு களைந்த மாவீரர் என்றும்போற்றி அகவல் பாடி சகஸ்ரநாம அர்ச்சனை புரிந்த ஆரிய ஏடுகளைப் பார்த்து!

---


## இவை, பாசறை வெளியீடுகள்!

அதாவது

புரட்சியின் வளர்ச்சிக்கான

**போர்க்கருவிகள்!**

★

**பெரியார்**

| | | | |
|---|---|---|---|
| சித்திரபுத்திரன் எழுதுகிறார் | 0 | 6 | 0 |
| புதியதோர் உலகு | 0 | 6 | 0 |

**ந. சி. கந்தையா**

| | | | |
|---|---|---|---|
| திராவிடம் என்றால் என்ன | 0 | 6 | 0 |
| ஆரியத்தால் விளைந்த கேடு | 0 | 6 | 0 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 | 0 |

**இரா. செழியன்**

| | | | |
|---|---|---|---|
| ஈரோட்டுப் பாதை | 0 | 6 | 0 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 | 8 | 0 |

★

## பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படவேண்டுமானால், வேறொரு கட்டளை, மிகமிகத் தைரியமான கட்டளை, நாஸ்திகர்கள் என்று நானிலமே தூற்றினாலும் கவலை துளியுமின்றி கருத்திலே சஞ்சலமின்றிப் பிறப்பித்துத் தீரவேண்டிய கட்டளை ஒன்று உள்ளது, அந்தக் கட்டளையைப் பிறப்பித்தால்தான் இந்த மசோதா பயன்படும், இல்லையேல் இது வீண், வீண்!

## 5

"**ஓடு வெளியே!**"—இதுதான் அந்தக் கட்டளை! இனி, பிறப்பிக்கப்பட்டே தீரவேண்டிய கட்டளை!

"நீ மடாதிபதியா? திருக்கயிலாய பரம்பரையா? கவலையில்லை! இதுவரை நீ மக்களை ஏய்த்துப் பிழைத்தது போதும்! ஓடு வெளியே!"

"நீ, பரம்பரை பரம்பரையாக இந்த மடாலயத்தை ஆண்டுவருகிறேன், ஆகவே இதனை ஆட்சி புரிவது என் பிறப்புரிமை என்று வீண்வாதம் புரிகிறாயா? அப்படியானால் பரம்பரை பரம்பரையாக உம் கூட்டத்தாரால் கொடுமைக்கு உள்ளான மக்கள் உமக்குக் கொடுக்கவிருக்கும் தண்டனை என்ன தெரியுமா? தீவாந்தரசிட்சை! ஏற்கத் தயாரா? இல்லையானால் ஓடு வெளியே!"

"இரும்புப் பெட்டியிலே இருக்கும் எண்பது இலட்சத்தையும், கரும்புத் தோட்டத்திலே வருஷம் காணும் கணக்கினையும், அருந்துணையாக இருக்கும் ஆயிரம் வேலியையும், பெரும் வருமானம் கொடுக்கும் பிற சொத்துக்களையும் எப்படி நான் பிரிவேன் அடடா இன்பப் பொருளையெல்லாம், ஒப்பி உழைத்ததில்லை சிறிதும் உடல் அசைந்ததில்லை என்று கனவு கண்டு விட்டு காலையில் கண்டபடி உளறிக் கொண்டிருந்தீராமே, நீர்தானா அது? என்ன செய்வது ஸ்வாமிகாள்! வெளியே போய்த்தான் ஆகவேண்டும்! காலம் மாறிவிட்டது! கபடர்களுக்கு இனி நாட்டில் இடமில்லை!"

"ஆனைபோல உடல் கொழுத்து, அரசர்போல போகம் துய்த்து, ஆரணங்கு போல அணிபணிபூண்டு, சிங்காரச் சீமான்போல வாகனம் ஏறி, கோயில்வாழ் சிலைபோல பிறர் தோள்மீது பவனிவந்து, அமராவதி குபேரன்போல சொத்தைப் பெற்று, விண்ணரசன் தேவேந்திரனைப்போல சுகவாழ்வு செலுத்தினேனே! போச்சே! என் வைபவமெலாம் போச்சே! என்று பித்தர்போல் பிதற்றுகிறீரே! நீர்மேல் குமிழி இவ்வுலகம்! காண்பதெலாம் மாயை! ககனமயில் வாகனனையே நினையும்! சிவனடிபாதம் சேரும்! ஓடு வெளியே! இது மக்கள் மன்றம் இனி! இங்கு மாதேவர்கட்கு இடம் இல்லை!"

"தர்மகர்த்தாக்களே! கோடி நமஸ்காரம்! கோயில் அல்ல இது இனி! தொழிற்சாலை! பூந்தோட்டம்! சிறுவர் சோலை! அறிஞர் ஆய்வுகூடம்! விஞ்ஞான நிலையம்! தெரிந்ததா! உங்கட்கு இனி இங்கே "சிரமமான அலுவல்" பார்க்கவேண்டிய "தேவதா கடமை" இல்லை! போய் வாருங்கள்!"

"ஓஹோ! நீதான் அர்ச்சகனோ! மோட்ச சாம்ராஜ்யத்தின் திறவுகோல் உன்னிடம்தான் இருக்கிறதோ! வெட்கமில்லையா உனக்கு இதுவரை மக்களை இதுபோலப் பொய்யுரை புகன்று ஏய்த்து வந்தோமே என்று! போ, போ வெளியே! இனியும் இங்கே நின்றால் மக்கட் சமுதாயத்தை இதுவரை ஏமாற்றி வஞ்சித்துப் பொருள் பறித்த குற்றத்திற்காக 6 ஆண்டு கடுங்காவல் கிடைக்கும், ஓடு வெளியே!"

"நீதான் அந்த அம்மனின் வைர மூக்குத்தியையும் சரிகைப் பாவாடையையும் திருடிய சாஸ்திரியோ! மனம் துணிந்து அம்மனின் பாவாடையைக் களவாடினாயே! நீயும் ஒரு பக்தனா! சீ, ஓடிப்போ! இனி இந்தத் திருட்டுப் (புரோகிதப்) பிழைப்பை விடு! போய் உழு அல்லது வெட்டு அல்லது நடு அல்லது கொத்து அல்லது மரம் வெட்டு! ஏதேனும் நாணயமான தொழில் செய்! நாட்டை வஞ்சிக்கும் செயல் புரியாதே! ஓடு வெளியே!"

—இதுபோல கோயில், மடம், ஆகிய அறநிலையங்களில் இருந்துகொண்டு அறம் இன்னது என்பதையே அறியாமல், "மக்களை வஞ்சித்துச் சுரண்டி சுகபோக வாழ்க்கையில் சுருண்டுகிடப்பது" என்பதையே தமக்குரிய "தருமமும் கருமமும் புகழு"மாகக் கொண்டு வாழும் "புண்ணிய சீலர்"களை அங்கிருந்து விரட்டி, அந்த இடங்களில் பல்லாண்டு பல்லாண்டாகப் படிந்துகிடக்கும் மத அழுக்குகளை அகற்றி, அந்த இடங்களையெல்லாம் தூய்மைசேர் நிலையங்களாக்கி, அங்கெல்லாம் மக்கள் சமுதாயம் சீர்பெற வாழ்வதற்கான அமைப்புகளை, மன்றங்களை, தொழிற்கூடங்களை, ஆராய்ச்சிச் சாலைகளை, கலைபயில் கழகங்களை, சொற்போர் சங்கங்களை, புதுமை பல காணும் விஞ்ஞானிகளின் அறிவுச்சாலைகளை, குழந்தை வளர்ப்பு விடுதிகளை, நோய் போக்கும் சாவடிகளை, இன்னபிறவற்றை ஏற்படுத்தியாக வேண்டும். ஆம்! கோயில்களிலும் மடங்களிலும் உள்ள சுரண்டல் பூனைகளைத் துரத்தியடித்துவிட்டு, பிறகு, அக்கோயில்களை, மடங்களை, மக்கள் நல் வாழ்க்கைக் கழகங்களாக ஆக்குவது, அவற்றின் சொத்துக்களை சர்க்காரின் சொத்தாக அதாவது மக்களின் சொத்தாக ஆக்குவது, கோயில்களைப் பொறுத்தவரை, "கோயிலில்தான் ஆண்டவனை வழிபடவேண்டும்! கோயிலில் மட்டும்தான் அவர் இருக்கிறார்! வேறு இடங்களிலே இல்லை!" என்று கருதுகிற நிலையும் நினைப்பும் உடையவர்க்கு மட்டும், ஒரு சில கோயில்களை மட்டும், தரகர் அற்ற நிலையில், அர்ச்சகர் அற்ற நிலையில், மந்திரங்கள் தந்திரங்கள் அபிஷேகங்கள் ஆராதனைகள் அத்தனையும் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், கிறித்தவர் இஸ்லாமியர் கோயில்களைப் போல உருவம் ஏதும் அற்ற நிலையில், உருவம் இருந்துதான் ஆகவேண்டும் என்போருக்கு "ஒரு கோயிலுக்கு ஒரு சிலை" என்ற கொள்கைப்படி வேறு சிலைகள் யாவும் அகற்றப்பட்ட நிலையில், சில கோயில்களைமட்டும் அமைத்துவிட்டு, பிற கோயில்கள் யாவற்றையும் மக்கள் வாழ்க்கையை வளமாக்கும் பல்வேறு பொதுநல நிலையங்களாக மாற்றித்தான் ஆகவேண்டும்! இத்தகைய பகுத்தறிவுத் திட்டத்தை நாடாளும் சர்க்கார் மேற்கொண்டாக வேண்டிய நிலையைக் கொஞ்சம் கொஞ்சமாக இப்போதே உருவாக்கிக் கொண்டு வருகிறது! உருவாகத்தானே வேண்டும்? உருவாகாவிட்டால் சுயமரியாதை இயக்கம் இந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அயராமல் ஆற்றிவந்துள்ள பகுத்தறிவுப் பிரசாரத்திற்குப் பொருள்தான் என்ன!

# சீக்கியர்கள் போர்க்கோலம்!

"கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் உள்ள குர்காவோன் ஜில்லா தனியாகப் பிரித்தெடுக்கப் படவேண்டும்.

"இப்படிப் பிரித்தெடுக்கப்பட்ட குர்காவோன் ஜில்லா, பாடியாலா சமஸ்தானம், கிழக்கு பஞ்சாப் சமஸ்தான யூனியன் பகுதிகள் ஆகிய மூன்று வட்டாரங்களும் ஒன்றாக இணைக்கப் படவேண்டும்.

"இப்படி இணைக்கப்பட்ட பகுதி சீக்கியர்களின் தாயகம் ஆகும். இங்கே சீக்கியர்களின் தனிஅரசு நிறுவப்படவேண்டும்.

"குர்முகி எழுத்திலே எழுதப்படுகிற பஞ்சாபி மொழியே இப்படி அமையும் சீக்கியர் தரணியில் சர்க்கார் மொழியாகவும் பள்ளிக்கூட மொழியாகவும் அமையவேண்டும்.

"இவ் வண்ணம் சீக்கியர் தனி அரசு நிறுவுவதற்கு எக்காரணத்தாலேனும் காலதாமதம் ஆகுமானால், இடைக்காலத்தில், பஞ்சாப் மாகாணத்தில், கவர்னர் ஹிந்துவாக இருந்தால், பிரதமர் சீக்கியராகவும், பிரதமர் ஹிந்துவாக இருந்தால் கவர்னர் சீக்கியராகவும் இருக்கும்படி சட்டம் ஏற்படுத்தப்படவேண்டும். அதோடு சட்டசபையிலும் தங்களுக்கென்று சில இடங்களை ஒதுக்கவேண்டும்."

—இவை பஞ்சாப் மாகாணத்தில் வாழும் சீக்கியர்களுடைய கோரிக்கை. இந்த இலட்சிய கீதம் திட்டவட்டமான முறையில் தீர்மான வடிவில் இன்னும் உருவாகவில்லையானாலும், சீக்கியர் தலைவர் **தாரா-சிங்** அவருடைய கூட்டுத்தோழர் **கியானி கர்தார் சிங்** போன்றவர்களால் பல்லாயிரக் கணக்கான சீக்கியர்கள் கூடும் பொதுக்கூட்டங்களில் அடிக்கடி வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கோரிக்கைக்கு சீக்கியர்களிடையே பலமான ஆதரவு இருக்கவேண்டும் என்பது, இந்தக் கோரிக்கையை எழுப்பிவரும் **தாரா சிங்**கும் வேறு ஏழு பெருந் தலைவர்களும் சென்ற வாரம் டில்லியில் அவர்கள் தங்கள் கட்சிக் கூட்டம் நடத்த இருந்த நேரத்தில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ளதிலிருந்தே நன்கு புலனாகிறது. இங்கே நாம், திராவிடத் தனி அரசு முழக்கம் எழுப்பி வருவதை எப்படி இங்குள்ள ஏடுகள் வடநாட்டவர் கண்களிலிருந்து மறைத்து வருகின்றனவோ அப்படித்தான் அங்குள்ள ஏடுகளும் சீக்கியர்களின் இந்தத் தனி அரசுக் கோரிக்கையை இருட்டடிப்புச் செய்து வந்திருக்கின்றன. சீக்கியர்கள் டில்லியில் தங்கள் கோயில் ஒன்றில் தங்கள் மாநாட்டைக் கூட்ட இருந்தனர். சாக்கார் தடை விதித்தது. அத் தடையை மீறி அவர்கள் கூட்டம் நடத்தியிருக்கின்றனர் என்று கூறி சர்க்கார் அவர்கள் தலைவர்களையும் முக்கிய தொண்டர்களையும் கைது செய்திருக்கிறது. சீக்கியர்கள் போர்க்கோலம் பூண்டுவிட்டனர். இதை அனுமதிக்க முடியாது என்று பட்டேல் சென்னையில் பேசியிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## 6

**மத சொத்துக்களை மக்களுக்கு ஆக்குவது என்பது ஒரு தொடர்கதை! அந்தத் தொடர்கதையின் பகுதிகள் மூன்று!**

**முதல் அத்தியாயம்,** முகத்துதித்தோர் என்ற பிறப்பு காரணமாகவோ அல்லது பரம்பரை வார்சு என்ற சிறப்பு காரணமாகவோ, அல்லது பணக்குண்டு கையில் உண்டு என்ற நிலைமை காரணமாகவோ, அல்லது வேறு எக் காரணத்தாலோ இந் நாளில், இச் சொத்துக்களைச் சூறையாடும நிலை பெற்றுள்ளோரைப் பார்த்து, **"எடு கணக்கை. காட்டு வரவு செலவை!"** என்று கூறும் பகுதி. இந்த அத்தியாயத்தை நீதிக் கட்சி, நேற்றே, எழுதிமுடித்துவிட்டது!

**இரண்டாவது அத்தியாயம்,** அச் சூறையாடிகளைப், பார்த்து, "கணக்கைக் காட்டினால்மட்டும் போதாது! வரவு செலவுப் பட்டியலைப் புரட்டினால் மட்டும் ஆகாது! உனக்கேன் இங்கு இவ்வளவு ஆதிக்கம்? உனக்கேன் இந்த சுரண்டல் வாழ்வு? **விடு இந்த அற நிலையங்கள்மீது உனக்குள்ள பிடியை! விடு!"** என்று கூறும் கட்டம். இந்த அத்தியாயத்தைத்தான், நமது ஆதரவு எனும் மையிலே தமது பேனாமுள்ளைத் தோய்த்துத் தோய்த்து விரைந்து எழுதிக்கொண்டிருக்கிறார் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமியார்!—இன்று! இந்த அத்தியாயம் இன்னும் சில வினாடிகளில் எழுதி முடிந்துவிடும்!

**மூன்றாவது அத்தியாயம்,** ஒவ்வொரு சூறையாடியையும் பார்த்து, "போ வெளியே! சுரண்டியது போதும்! இனி இருக்காதே இங்கே! ஓடு! ஓடு வெளியே!" என்று கூறும் கட்டம்! அவர்கள் ஓட்டப்பட்டபின் கோயில் சொத்துகள் முழுவதையும் மக்கள் உடமையாக ஆக்கும் கட்டம்! இந்த அத்தியாயம்தான் இன்னும் எழுதப்படவில்லை!

நாம் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டது போல, இந்த மூன்று அத்தியாயங்களிலும், மூன்றாவது அத்தியாயம்தான் அருமையான அத்தியாயம், மிக முக்கியமான அத்தியாயம், வயிரம் பாய்ந்த உள்ளமும், "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவர் வாய்மொழியில் தம் வாழ்க்கை வழியைக் காணும் பண்பும் படைத்தவர்களால் மட்டுமே எழுதப்படக்கூடிய அற்புதமான அத்தியாயம்!

**இந்த அத்தியாயம் நாளை, நாளை என்றும் விரைவில் எழுதப்படும்! எழுத இருப்பது திராவிடர் கழகம்!**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தர்கள் தரும் பாதகாணிக்கை, அவற்றை வட்டிக்கு விடுவதாலோ வீடு முதலியவற்றை வாங்கி வாடகைக்கு விடுவதாலோ பெருகும் தொகை ஆகிய இவ்வளவையும் கணக்குப் பார்த்தால், நாட்டுக்குத் தேவையான எவ்வளவு பெரும் பொருள் வீணாகக் கோயில்களில் முடங்கிக் கிடக்கிறது என்பது நன்கு புலனாகும். கோயில்களில் முடங்கியுள்ள சொத்து ஏராளம் என்பதுமட்டுமல்ல, ஆண்டுதோறும் மாதம் தோறும் வாரந்தோறும், நாள்தோறும் ஒவ்வொரு கோயிலிலும் செலவாகும் செலவு வேறு உள்ளது, இது பெரிதும் அவ்வப்போது பல புதிய பக்தர்கள் அளிக்கும் நன்கொடையிலிருந்து செய்யப்படுகிறது. மாசி மகம், பங்குனி உத்திரம், திருவாதிரை திருநாள், சித்திரா பவுர்ணமி, வைகாசி விழா, என்று இப்படி அவ்வப்போது வரும் உற்சவங்களும் அந்த உற்சவங்களுக்குச் செலவிடப்படும் தொகையும், ஆண்டு தோறும் கொண்டாடப்படும் பிரம்மோற்சவங்களும், கோயில்கள் புதுப்பிக்கப்படும்போது செய்யப்படும் கும்பாபிஷேகங்களும், அப்படிப் புதுப்பிக்கும்போது ஆகும் செலவும் ஆகிய இவ்வளவையும் எண்ணிப் பார்க்கும்போது, அதே நேரத்தில், நாட்டில் பசிபசி என்று பரிதவிக்கும் குடும்பங்களையும், வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வேதனைத்தீயில் வதைபட்டு வாடி வருந்தும் மக்கட்கூட்டத்தையும் நினைத்துப் பார்க்கும்போது எவர் உள்ளம்தான் பதறாமல் இருக்கமுடியும்? ஆண்டவன் அண்ட சராசரங்களைப் படைத்தவன், அவற்றில் உள்ள ஜீவராசிகள் அனைத்தையும் படைத்தவன், அகில உலகத்தையும் படைத்தவன், அதில் உள்ள பொன் பொருள் பண்டங்கள் சகலத்தையும் படைத்தவன், வைரமானாலும் வைடூரியமானாலும், செம்பானாலும் பித்தளையானாலும் தங்கமானாலும் வெள்ளியானாலும், பாலானாலும் தேன் ஆனாலும் அவனால் படைக்கப்பட்டவையே. அப்படியிருக்க அவனால் படைக்கப்பட்ட அதே பொருள்களை அவனிடமே கொண்டு சென்று காணிக்கை யளிப்பதெனக் கூறி கோயிலிலே முடங்கும்படிவிடுவது மடமை! மடமை மட்டுமல்ல! மக்கள் பல்லாயிரவர் பசியாலும் பஞ்சத்தாலும் நோயாலும் கொடியாலும் வாடும்போது இப்படிச் செய்வது பெருங்கொடுமை!

திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் "அண்ணாமலைக்கு அரோகரா" ஆண்டவனுக்கு மட்டும் செலவாகும் பட்டியல் இதோ உள்ளது, நண்பர்கள் காணட்டும்:

## கோயில் திருப்பணி

| | ரூபாய்கள். |
|---|---|
| திருவண்ணாமலையில் அருணாசல ஈஸ்வரரின் சாமி கோவில் அம்மன் கோவில் மண்டபம் ஆகியவை பிரித்துக்கட்டியதற்கு | 1200000 |
| சுவாமிக்குக் கல்யாண மண்டபம் கட்ட | 50000 |
| கோயில் பிரம்மதீர்த்தக் குளம் படிக்கட்டுக் கட்ட | 75000 |
| கோவில் சிவகங்கை தீர்த்தக்குளம் அகலப் படுத்தி மண்டபம் கிராதி கட்ட | 175000 |
| விநாயகருக்கு வெள்ளிக் கவசம் போட | 5000 |
| தளவரிசைக்கு | 20000 |
| சத்திவிலாசத்துக்கும், பிரம்மதீர்த்தத்துக்கும் போகத் தளவரிசை | 5000 |
| கோபுரத்துக்கு வெளியில் சுவாமியை எழச்செய்யும் கல்யாண மண்டபம் | 35000 |
| துர்க்காம்பாள் கோவில் கர்ப்ப—அந்திராள—நவராத்திரி மண்டபம் கட்ட | 35000 |
| ஆதி—அடி அண்ணாமலையார் கோவில்கட்டி சுவாமி அம்மன் பிரதிஷ்டை செய்ய | 350000 |
| அம்பாளுக்கு நாகாபரணம் வெள்ளிக் கவசம் | 5000 |
| பார்ப்பனருக்கும், வேலைக்காரருக்கும் அக்கிரகாரமும் வீடும் | 10000 |

## சுவாமிக்கும், அம்மனுக்கும் நகைகள்.

| | |
|---|---|
| அம்மனுக்குத் தாலி | 3000 |
| ஷை கர்ணபத்திரம் | 2000 |
| சாமிக்குக் கர்ணபத்திரம் | 1500 |
| அம்மனுக்கு ஒட்டியாணம் | 1500 |
| மற்றொரு அம்மனுக்கு கர்ணபத்திரம் | 2000 |
| சாமிக்கும் அம்மனுக்கும் கைக்கு உறை (அபயஸ்தம்) | 15000 |
| அம்மனுக்கு பத்ம பீடம் | 500 |
| தும்புரு நாரதருக்குத் தங்கத்தகடு | 2300 |
| ஷை மரத்துக்கு ரேக்கு | 300 |
| இந்திர விமானம் (வெள்ளி) | 80000 |
| ஷை நிறுத்தக் கட்டிடம் | 8000 |
| சின்ன இந்திர விமானம் | 15000 |
| எடுபிடி உபசார சாமான் | 2565 |
| வெள்ளிக்குடை 2—க்கு | 2500 |
| சுப்பிரமணிய சாமி முதலியவற்றுக்கு வெள்ளிக் கவசம் | 3000 |
| வாசற்படிக்கு வெள்ளித் தகடு | 300 |
| தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்குப் படி—பீடம் முதலியன | 3000 |
| துர்க்காம்பாளுக்கு வெள்ளிக் கவசம் | 500 |
| மூல உற்சவ சாமிகளுக்குப் பட்டுச்சரிகை உடைகள் | 2000 |
| நெற்றிப்பட்டம் விபூதிப்பட்டை தொங்கட்டம் உள்பட | 12000 |
| இடப்பறத்து அம்மனுக்கு நெற்றிப்பட்டம் | 8550 |
| அம்மனுக்குப் புலாக்கு | 1200 |
| சாமிக்கு விபூதிப் பட்டம் | 7475 |
| மூலசாமிக்கு நாகாபரணம் | 25000 |
| எலக்டிரிக் விளக்கு எஞ்சின் உள்பட | 90000 |
| வெள்ளி ரிஷப வாகனம் | 35000 |
| ஷைக்குக் கட்டிடம் | 7500 |
| ரிஷபவாகனத்திற்குக் கூட வருகிற எஞ்சின் | 2000 |
| வெள்ளிச் சின்ன ரிஷப வாகனம் | 3000 |
| வெள்ளிக் குத்துவிளக்கு 2-க்கு | 3500 |
| அம்மன் மூலஸ்தானத்துக்குக் குத்துவிளக்கு | 2010 |

| | ரூபாய்கள். |
|---|---|
| சாமிக்கு வெள்ளி நாகாபரணம் | 1300 |
| சாமிக்குக் கவசம் கிரீடம் தங்கம் | 7648 |
| சாமிக்கு ரத்ன வைரக் கிரீடம் | 30000 |
| அம்மனுக்குத் தேர்த் தகடு | 20000 |
| சுவாமிக்குத் தேர்த் தகடு | 55000 |
| சோமாஸ்கந்தருக்கு வைரக் கிரீடம் | 44000 |
| விநயகருக்குச் சொர்ண கவசம் | 7000 |
| தக்ஷணமூர்த்திக்கு வெள்ளிக் கவசம் | 285 |
| வேறுசாமி இரண்டு அம்மன், ஆஞ்சநேயர், கருடன், இவைகளுக்கு வெள்ளிக் கவசம் | 1680 |
| கெஜலட்சுமிக்கு வெள்ளிக் கவசம் | 705 |
| ஆறுமுகம், அம்மன்கள் வெள்ளிக் கவசம் | 1842 |
| சண்டிகேசுவரர் கவசம் | 255 |
| வைரவர் கவசம் | 608 |
| சனீஸ்வரர் கவசம் | 135 |
| சுப்பிரமணியர், வேணுகோபாலர் திருவாக்ஷி | 2700 |
| வெள்ளிக் காமதேனு | 30000 |
| வெள்ளிக் கற்பக விருட்சம் | 30000 |
| ஷை களுக்குக் கட்டிடம் | 10000 |
| வாகனத்தோடு கூடவருகிற எலக்ட்டிரிக் எஞ்சின் | 2000 |
| அம்மனுக்குத் தங்கக் கிளி | 150 |
| சோமவார வெள்ளிக் குத்துவிளக்கு | 500 |
| சாமிக்குத் தங்கக் கவசம் | 5000 |
| சலங்கை மாலை | 500 |
| சாமிக்கு டாலர் கோத்த தங்கச் செயின் | 1000 |
| வயிர டாலர் கோத்த தங்கச் செயின் | 1000 |
| அம்மனுக்கு வயிர நத்து | 500 |
| இரட்டைப் பேட்டை சங்கலி | 300 |
| பதக்கம் கோத்த தங்கச் செயின் | 350 |
| அம்மனுக்கு மார் கவசம், | 1000 |
| பாதம் முதலிய கவசம், | 129 |
| வெள்ளிக் கிரீடம் | 81 |
| அம்மனுக்குப் பிரபை | 346 |
| நகை வைக்க இரும்புப் பெட்டி | 900 |
| வைர மூக்குத்தி | 250 |
| வெள்ளிரதம் தங்கத் திருவாட்சி ரதம் | 125000 |
| ரதம் நிற்கும் கொட்டகை | 10000 |
| தேர் முட்டி | 3000 |
| இரதத்துடன் வருகிற எஞ்சின் | 3000 |
| சாமிக்குப் பொன்முடியும் தங்கப்பூணூலும் | 2745 |
| வலம்புரிச் சங்கு | 750 |
| காண்டாமிருகக் கொம்பு | 100 |
| அம்மனுக்கு வெள்ளிக் குதிரை | 15000 |
| விநயகருக்கு விமானம் | 2500 |
| சாமிக்குக் குதிரை வாகனம் | 15000 |
| மகிரி (நகை) 2-க்கு | 7250 |
| பெரிய காசுமாலைகள் 3-க்கு | 7227 |
| வயிர மாங்காய் மாலை | 5200 |
| இடப்புறத்தம்மனுக்குக் கவசம் | 523 |
| ஷை அஸ்தம் | 115 |
| தனி அம்மனுக்கு அஸ்த்தம் | 255 |
| ஷை பாதம் | 532 |
| ஜடையில்லை | 2000 |
| விநயகர் நெற்றிபட்டம் விபூதி | 208 |

| | ரூபாய்கள். |
|---|---|
| சோமாஸ்கந்தருக்குத் திருவாக்ஷி | 2355 |
| சாமிக்குப் பெரிய திருவாக்ஷி தங்கத்தில் | 5000 |
| அம்மனுக்கு ஷை | 3750 |
| சண்டிகேஸ்வரருக்கு முலாம் | 200 |
| சம்பந்த விநயகருக்குக் கவசம் | 5040 |
| சந்திரசேகர சாமிக்குக் கவசம் | 1691 |
| பாத்திரம் வெள்ளிக் குடம் 6-க்கு | 2100 |
| அர்ச்சிய வட்டம் 7-க்கு | 1650 |
| வெள்ளி அபிஷேக கவசம் 3-க்கு | 300 |
| வெள்ளி அண்டா 1-க்கு | 1529 |
| தாம்பாளம் 2-க்கு | 503 |
| பூஜைமணி 2-க்கு | 466 |
| அலங்கார தீபம் 2-க்கு | 803 |
| வில்வார்த்தி | 144 |
| சருட்டி | 125 |
| குடை | 112 |
| விசிறி | 117 |
| கண்ணாடி | 99 |
| ஆலவட்டம் | 131 |
| வெள்ளித்தட்டு 10-க்கு | 139 |
| வெள்ளி 7-கிளை கற்பூரத் தட்டு | 134 |
| வெள்ளிக் கைத் தீவட்டி 2-க்கு | 150 |

## வாகன அலங்காரம்.

| | |
|---|---|
| உற்சவ சுப்பிரமணியர் திருவாக்ஷி | 955 |
| ஷை ரிஷப வாகனம் | 6000 |
| சண்டிகேஸ்வரர் திருவாக்ஷி | 196 |
| வெள்ளி கோரி | 7000 |
| யானை வாகனம் | 6000 |
| சிறு மரத்தேர் | 1500 |
| விநயகர் பித்தளைப் பீடம் | 350 |
| மரச் சிங்க வாகனம் | 700 |
| மரக் காமதேனு வாகனம் | 1000 |
| தங்கரேக் தரிசன விமானம் | 6000 |
| பிள்ளையார் மேல்கோப்பு | 5500 |
| ராஜாமண்டப இரும்புக் கதவு | 1000 |
| பொக்கிஷம் பல்சட் | 750 |
| சஞ்சீவிராயருக்குக் கட்டிடம் | 1200 |
| நந்தி கொட்டகை | 100 |
| பிள்ளையாருக்கு கோவில் கட்டிடம் | 2000 |
| கிணறு, ஏரி படிக்கட்டு | 3000 |
| கடைகள் கட்டியது | 4100 |
| கடைகள் வாங்கியது | 13350 |
| கண்ணாடி விமானம் | 500 |
| தெப்ப விமானம் | 7700 |
| சர்வே செய்ய | 2000 |
| ஏரி மராமத் | 1500 |
| உற்சவத்துக்குச் சாக்கடை கட்டியது | 1000 |
| கெஜலட்சுமிக்கு விமானம் | 300 |

மேல் கண்டவைகள் மொத்தமாகக் கட்டிடம் நகை வாகனம் ஆகியவைகளுக்கு ஆக செலவு செய்யப் பட்டவற்றின் தொகைகளாகும். இவை மொத்தம் சுமார் 30,00,000 ரூபா ஆகும்.

இனி மாத வருஷ செலவுகள் விவரமாவது :

| | மாதச்செலவு ரூபா. |
|---|---|
| உஷக் காலை பூஜை வெண்பொங்கலுக்கு | 75 |
| கட்டளை அபிஷேகம், சர்க்கரைப்பொங்கல், தயிர்ச்சாதம் | 200 |
| கட்டளை நைவேத்தியம் பூசை தயிர்ச் சாதம் | 60 |
| தனிக்கட்டளை | 50 |
| புளியோதரைக்கு | 40 |
| கொழுக்கட்டைக்கு | 30 |
| வடை, பாயாச சுத்தன்னம் | 30 |
| மற்றொரு ஷை | 30 |
| தினம் பூசை அபிஷேகம் நைவேத்தியத்திற்கு, பால் படி 34-க்கு மொத்தம் | 300 |
| காலசந்தி பூசைக்கு | 200 |
| எலக்ட்ரிக் விளக்கு | 600 |
| சோமவார அபிஷேகத்துக்கு | 10 |
| சுக்கிரவார அபிஷேகத்துக்கு | 15 |

## உற்சவகால மண்டபப்படி.

| | |
|---|---|
| 2-ம் நாளைக்கு | 500 |
| 3-ம் நாளைக்கு | 400 |
| 4-ம் நாள் | 800 |
| 5-ம் நாள் | 400 |
| 6-ம் நாள் | 600 |
| 8-ம் நாள் | 400 |
| 9-ம் நாள் | 700 |
| 5-உற்சவத்திற்கு வருஷம் | 1250 |
| ஆருத்திரா தரிசன உற்சவத்திற்கு வருஷம் | 500 |

## வேத பாடசாலைகள்.

| | |
|---|---|
| பாடசாலைக் கட்டிடம் 2-க்கு | 75000 |
| இதற்கு மூலதனம் | 50000 |
| மற்றொரு வேத பாடசாலைக் கட்டிடத்திற்கு | 150000 |
| இதற்கு மூலதனம் | 150000 |

திருவண்ணாமலை கோயிலுக்கு இத்துணைப் பெரும் பொருள் செலவாகிறது. நாட்டில் இருப்பது திருவண்ணாமலை கோயில் ஒன்று மட்டுமல்ல! பிரதமர் ஓமந்தூரார் நமக்களித்துள்ள கணக்குப்படி தென்னாட்டில் 12,232 பெரிய கோயில்களும் 15,357 சிறிய கோயில்களும் இருக்கின்றன! இவ்வளவு கோயில்களிலும் ஆண்டுதோறும் செலவாகும் தொகையைக் கூட்டிப் பார்த்தால் அது எத்தனை கோடியிருக்கும்? அத்தனை கோடியும் இன்று வீணுக்குத்தானே இறைக்கப்படுகிறது. இது நியாயமா?

அண்ணாமலையார் கோவிலையும் அவர் பத்தினியார் கோவிலையும் பிரித்துக் கட்டியதற்கு மட்டும் ரூ 12 லக்ஷம் செலவாகியிருக்கிறதே, இந்த 12 லட்சம் ரூபாயையும் சிதம்பரம் நகராண் கழகத்தாரிடமோ சென்னை கார்ப்பரேஷனிடமோ தந்திருந்தால், வீடின்றித் தவிக்கும் எத்தனை ஆயிரம் குடும்பங்களுக்குச் சிறு குடிசை அமைத்துத் தந்திருக்கலாம்? சுவாமிக்குக் கல்யாண மண்டபம் கட்டுவதற்காக மட்டும் ரூ. 50,000 செலவாகியிருப்பதாக, கணக்குப் பட்டியல் புள்ளிவிவரம் தருகிறதே, கையில் காசில்லாத காரணத்தால் கல்யாணம் செய்துகொள்ள முடியாமல் புழுங்கிக் கிடக்கும் வறியவர் பலருக்கு இத்தொகையைக் கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? சாமிக்குக் குதிரை வாகனம் 15000 செலவிலும் அம்மனுக்குக் குதிரை வாகனம் மற்றொரு 15000 செலவிலும் செய்திருக்கிறார்களே, இது தேவையா? இந்த வாகனங்கள் அம்மனுக்கோ சாமிக்கோ குண்டூசி முனையளவேனும் பயன்படுமா? இவற்றின்மீது ஏறிக்கொண்டு அம்மனோ சாமியோ தாமே சவாரி செய்ய முடியுமா? ஏன் இந்த வீண் செலவு? வெள்ளி ரிஷபம் செய்ய ரூ 35,000, வெள்ளிக் காமதேனு செய்ய ரூ. 30 000, வெள்ளியால் கற்பக விருட்சம் செய்ய ரூ 30,000, வெள்ளித் தேர் செய்ய ரூ. 1,25,000, தெப்ப விமானம் ரூ. 7700-ல், யானை வாகனம் ரூ. 6000-ல்—இவையெல்லாம் ஆண்டவனுக்கு மகிழ்ச்சியைத் தருமா? இவற்றால் எல்லாம் அவர் களிப்படைந்துவிடுவாரா? இவை இல்லாவிட்டால் அவரால் வாழ முடியாதா?. ஏன் இவ்வண்ணம் பாழுக்கு இறைக்கப்படும் பணத்தை மக்களின் வாழ்வுக்கு ஆக்கக்கூடாது? எங்கும் நிறைந்த ஆண்டவனுக்குச் சின்னஞ்சிறு கோயில் ஏன்? எல்லாவற்றையும் கடந்த இறையவனுக்குத் ததியோதனும் புளியோதரையும் கொழுக்கட்டையும் பாலன்னமும் எதற்காக? யாவற்றையும் உணர்ந்த கடவுளுக்கு வெள்ளித்தேரில் ஏற்றி ஊரைச் சுற்றிக் காட்டினால்தானா உலகம் தெரியும்? ஆண்டவன் என்றால் என்ன? எங்கும் நிறைந்த, யாவற்றையும் உணர்ந்த, எதனையும் இயக்குகின்ற, எல்லாவற்றையும் கடந்த, மனம் மொழி மெய் யாவற்றையும் தாண்டிய, "அப்பாலுக்கு அப்பாலாய் அப்பாலும் சூன்யமாய்," இருப்பவர்தானே ஆண்டவன்? அவர் பெயரைக் கூறியா இவ்வளவு பெருந்தொகை, உற்சவத்தின் பெயராலும், மூர்த்திகளின் பெயராலும், பூஜைகளின் பெயராலும், புனஸ்காரங்களின் பெயராலும், திருக்குளத்தின் பெயராலும், படிக்கட்டின் பெயராலும், கோபுரத்தின் பெயராலும் குத்துவிளக்குப் பெயராலும், கையுறையின் பெயராலும், ஜடையிலை பெயராலும், மார்பணியின் பெயராலும் இடுப்பணியின் பெயராலும் செலவிடப்படவேண்டும்? கோபுரவாசலும் கொட்டுமுழக்கமும் இல்லாவிட்டால் ஆண்டவன் நம் "பக்தி"யைப் பற்றி ஐயமா கொண்டுவிடுவார்? உஷாகால வெண்பொங்கல் பூஜையும், வடை பாயாச சுத்தன்னமும் படைக்காவிட்டால் நமக்கு ஒழுக்கமில்லை என்று ஆண்டவன் முடிவுகட்டிவிடுவார்? சுக்கிரவார அபிஷேகமும் சோமவார தனிக்கட்டளையும் செய்யப்படாவிட்டால் "சகலத்தையும் கடந்து சகலத்திலும் கலந்து நிற்கும் ஜோதிமூர்த்தி" நம்மைப் பார்த்து "பிடி சாபம்" என்று கூறிவிடுவார்? எல்லாவற்றையும் கடந்த முழுமுதல் பொருளுக்கு இந்தச் சிறுபிள்ளை விளையாட்டு மகிழ்ச்சி தரும் என்று எந்தமட்டரக

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)